**OS.73/2019**

**நாள்.** 17.03.2026.

**பி.வா.சா. 1 – முனியாண்டி த/பெ.கருப்பையா**

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

காங்கேயமுத்துப்பிள்ளையும், அவரது வாரிசுகளும் சர்வே எண்.47 ல் கண்ட மொத்த சொத்தில் யார்யாருக்கு எவ்வளவு விஸ்திரணம் கிரையம் கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் மொத்தமாக தெரியாது. அவ்வாறு தெரியாமலேயே காங்கேயமுத்துப்பிள்ளையும், அவரது மக்களும் அவர்களுக்கு பாத்தியமான சொத்தைவிட கூடுதலாக கிரையம் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.25 ஆவணத்தில் கண்ட சொத்தும், தாவா வழக்கில் கண்ட சொத்தும் ஒன்றா என்றால் ஒன்றுதான். பி.வா.சா.ஆ.25 தீர்ப்பின் அடிப்படையில்தான் இந்த வழக்கை எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.25 ல் கண்ட தீர்ப்பாணையில் 1ம் இலக்க சொத்து சர்வே எண்.47/16 ல் கண்ட மொத்த சொத்தில் ஒருபகுதிக்கானது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.25 தீர்ப்பில் கண்ட சொத்திற்கும், தாவா வழக்கில் கண்ட சொத்துகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.25 ல் கண்ட 1ம் இலக்க சொத்தான சர்வே எண்.47/16 ல் கண்ட சொத்திற்கு தெற்புறமாக ஒரு கிழமேல்பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த பாதைதான் பி.வா.சா.ஆ.25 வழக்கில் 2ம் இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.25 ல் கண்ட 2ம் இலக்க சொத்திற்கும் தாவா வழககில் கண்ட சொத்துக்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.25 வழக்கில் வாதியான முருகேசனுக்கும், இவ்வழக்கில் உள்ள பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. முருகேசனிடமிருந்து நாங்கள் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளோமா என்றால் இல்லை, அவர் என் ஊர்க்காரர். பி.வா.சா.ஆ.24 பரிவர்த்தனை பத்திரத்தில் கண்ட 2வது நபர் உரிமையில்லாத

சொத்தை பொறுத்து பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என பி.வா.சா.ஆ.25 ல் கண்ட வழக்கில் தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.24 பரிவர்த்தனை பத்திரத்தில் கண்ட எழுதிக்கொடுத்தநபரும், எழுதி வாங்கிய நபரும் அந்த பத்திரத்தின் அடிப்படையில் அந்த சொத்துக்களை அடைந்தார்களா என்றால் இல்லை. தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு 40 ஆண்டுகள் அனுபவ பாத்தியம் இருந்து வருகிறது என்று என சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதிகளுக்கும் பிரதில் கோரியுள்ளவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.